(முழுப் பதிப்புரிமையுடையது)
(All rights reseved)



கொரோணா தொற்று நோய்

விசேட பாடசாலை விடுமுறை கால கல்வி வேலைத்திட்டம்- 2020

தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு

14 தலைப்புக்களின் கீழான நுண்ணறிவு செயலட்டை

இலக்கம் -1 பிரதியீடு செய்தல்

ஆக்கம்.

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்-

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

071-182-6-181 – 077-635-8-304

அன்பின் சிறார்களே! உலகம் முழுவதும் பரவி வரும் கொரோணா வைரஸ் காரணமாக உங்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் பாதுகாப்பாக வீட்டில் இருந்தவாறே இங்கு காணப்படும் பயிற்சியையும் மேலதிக பயிற்சிகளையும் செய்து உங்கள் கல்விச் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் படியும் வீணாக தொலைக்காட்சி பார்த்து காலத்தைக் கழிக்க வேண்டாம் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த முதலாம் தொகுப்பில் பிரதியீடு செய்தல் தொடர்பான விளக்கத்தையும் மாதிரி பயிற்சிகள் சிலவற்றையும் ஒன்று திரட்டி உங்கள் கைகளில் வழங்கியிருக்கின்றேன் அவைகளை நன்றாக விளங்கிக் கொண்டு இயலுமான வரையில் சுயமாக செய்து பயனடையும்படி கேட்டுக் கொள்கிறேன். - நன்றி



www.ikeou.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

பிரதியீடு செய்தல்

பிரதியீடு என்பது என்ன என்பதை விளங்கிக் கொள்ள கீழுள்ள உரையாடலை வாசிப்போம்.

- அம்மா :- மகன் , குமார். பாடசாலைக்கு செல்ல நேரம் சரி .வாங்க போவோம்.
- குமார் :- சரி அம்மா நான் ஆயத்தமாகிவிட்டேன் .போவோம்.

அம்மா பாடசாலையில் குமாரை விட்டு வருகிறாள். அப்போது ஆசிரியர் குமாரின் வகுப்புக்கு நுழைகிறார்.

- ஆசிரியர் :- வணக்கம் பிள்ளைகளே.
- பிள்ளைகள் :- வணக்கம் சேர்.
- ஆசிரியர் :- பிள்ளைகளே, நான் நேற்று சொன்ன படி இன்று சொல்வதெழுதுதல் எழுதுவோம்.

(பிள்ளைகள் சொல்வதெழுதுதல் எழுத ஆயத்தமாகும் போது குமார் மட்டும் ஏதோ ஒன்றைத் தேடுவதை ஆசிரியர் காண்கிறார்.)


- ஆசிரியர் :- குமார் என்ன செய்கிறீங்க?.
- குமார் :- சேர்.எனது பென்சிலை காணவில்லை. எழுத வேறு பென்சில் எதுவும் இல்லை.
- ஆசிரியர் :- குமார் பரவாயில்லை. இதோ ‘‘இந்த பேனையால் எழுதுங்க’’. (ஆசிரியர் குமாருக்கு தனது பேனையை வழங்குகிறார்.)
- குமார் :- நன்றி சேர்.

இங்கு குமாருக்கு **பென்சில் இல்லாத படியால் ஆசிரியரால் பேனை வழங்கப்பட்டு** குறிப்பிட்ட காரியம் நிறைவு செய்யப்பட்டது. இதுவே பென்சிலுக்கான பிரதியீடு பேனை என எடுத்துக் கொள்ளப்படும்.

பிரதியீடு என்பது ஒரு பொருளுக்குப் பதிலாக வேறு ஒரு பொருள் அல்லது உருவொன்றுக்காக வேறு உரு , எண்ணொன்றுக்காக வேறு எண் , குறியீடொன்றுக்காக வேறு குறியீடுகள் , சொல்லுக்காக வேறு சொல் அல்லது சொற்றொடர் என்பவற்றைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துவதாகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.


01- பொருட் பிரதியீடு

(A) முதலிலுள்ள உருக்களுக்குப் பதிலாகப் பயன்படுத்த மிகவும் பொருத்தமான உருவைக் கீறிடுக.

1) 


1.


2.



3.


2) 


1.



2.


3.

3) 



1.



2.



3.


www.ikedu.lk


4) 



1.



2.



3.

5) 



1.



2.



3.


6) 



1.



2.


3.

7) 


1.


2.


3.

02- சொல் பிரதியீடு

(B) பின்வரும் வசனங்களில் கோடிடப்பட்டுள்ள சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்த மிகவும் பொருத்தமான வேறொரு சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக

1) **<u>ஆசிரியர்</u>** பாடசாலைக்கு வரும் போது பிள்ளைகள் வணக்கம் கூறினார்கள்.

1. அதிபர் 2. ஆசான் 3. மாணவன்

2) எனக்கு பாரிய **<u>சத்தமொன்று</u>** கேட்டது.

1. ஒளி 2. ஓசை 3. பெரிய

3) தம்பி பாம்பைக் கண்டு **<u>பயத்தால்</u>** நடுங்கினான்.

1. ஆர்வத்தால் 2. மகிழ்ச்சியால் 3. அச்சத்தால்

4) எனது தம்பி **<u>சருருளி</u>** வாங்கிக் கேட்டு அடம்பிடித்தான்.

1. வாகனம் 2. பரிசு 3. மிதிவண்டி

5) அவனைப் பார்க்கும் போது எனக்கு **<u>மகிழ்ச்சியாக</u>** இருந்தது.

1. குதூகலம் 2. துன்பம் 3. கோபமாக

6) இலங்கையின் வரலாற்றை பழைய **ஏடு**களில் காணலாம்.

1. கற்களில் 2. குகைகளில் 3. நூல்களில்

www.ikeju.lk

(C) இடைவெளிக்கு வரவேண்டிய சரியான சொல்லைக் கீறிடுக.

1) அந்த .....மக்கள் வெளிவந்துக் கொண்டிருந்தார்கள்.

1. வீட்டுக்கு 2. வீட்டிலே 3. வீட்டிலிருந்து

2) சிலர் .....மொழுகுதிரி எனவும் கூறுவதுண்டு

1. மெழுகுவர்த்தியால் 2. மெழுகுவர்த்தியை 3. மெழுகுவர்த்தியில்

3) டெங்கு .....டெங்கு நோய் வேகமாகப் பரவும்

1. நுளம்பினால் 2. நுளம்பிற்கு 3. நுளம்பு

4) வெளிநாட்டுக்குச் .....மக்கள் வெறுங்கைகளுடன் திரும்பி வந்தார்கள்.

1. செலகின்ற 2. செல்ல 3. சென்ற

5) ஆதிகால மக்கள் குகைகளில் அழகான .....வரைந்தார்கள்.

1. சித்திரங்களால் 2. சித்திரங்களை 3. சித்திரங்களுக்கு

6) அவர்கள் முதல்தடவையாக எமது .....வந்துள்ளார்கள்.

1. நாட்டிலே 2. நாட்டில் 3. நாட்டுக்கு

7) அவரவர்கள் .....அவர்களுக்கு கூலி வழங்கப்படும்

1. செய்தவற்றுக்காக 2. செய்தவற்றில் 3. செய்தவற்றால்

8) நாம் இப்போது நவீன .....வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம்.

1. காலத்தால் 2. காலத்திற்கு 3. காலத்தில்

9) சித்திரைப் .....பாடசாலை இரு வாரங்களுக்கு மூடப்படும்.

1. புத்தாண்டுக்காக 2. புத்தாண்டில் 3. புத்தாண்டுகளால்

10) இடைவிடாத கடும்..... வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின .

1. மழையால் 2. மழையின்றி 3. மழைக்காக

⁂ தடித்த எழுத்திலுள்ள சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்த மிகவும் பொருத்தமான வேறொரு சொல்லைக் கீறிடுக

11) எமது **நாடு** அழகானது

1. ஊர் 2. தேசம் 3. கிராமம்

12) **பண்டிகைக்** காலத்தில் பொருட்களின் விலை அதிகம்

1. சுதந்திர 2. பருவம் 3. விழா

13) அவன் தனது **மனையை** உயரமாகக் கட்டியிருந்தான்.

1. சுவரை 2. வேலியை 3. வீட்டை

14) நான் இரவில் **புத்தகம்** வாசிப்பேன்.

1. ஏடு 2. பத்திரிகை 3. மடல்

15) அயலவர்களுடன் **ஒற்றுமையாக** வாழ்வோம்.

1. அமைதியாக 2. ஐக்கியமாக 3. நிம்மதியாக

www.ikedu.lk

(D) பழமொழிகளின் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கோடிடுக

1) அடம்பன் கொடியும் ..... மிடுக்கு

(1. திரண்டால் 2.திரண்டாள் 3 திரன்டால்).

2) அன்பான ..... ஆபத்தில் அறியலாம்.

(1.சிநேகிதனை 2.சினேகிதனை 3.சினேகிதணை)

3) இக்கரை மாட்டுக்கு ..... பச்சை

(1.அக்கறை 2.அக்கரை 3. இக்கரை)

4) உப்பிட்டவனை ..... நினை.

(1.உல்லளவும் 2.உள்ளளவும் 3.உல்ளளவும்)

5) ஒன்றுபட்டால் உண்டு .....

(1.வாள்வு 2.வாள்வு 3.வாழ்வு).

6) காற்றுள்ள போதே .....

(1.தூற்றிக்கொள் 2.தூற்றிக் கொல் 3.தூற்றிக் கொழ்).

7) அளவுக்கு ..... அமுதமும் நஞ்சு.

(1.மிஞ்சிணால் 2.மிஞ்சினாள் 3.மிஞ்சினால்)

8) தலைக்கு மேல் ..... சாண் ஏறினால் என்ன?

(1.வெள்ளம் 2.வெள்லம் 3.வெல்லம்)

9) தொட்டிற் ..... சுடுகாடு வரை

(1.பழக்கம் 2.பலக்கம் 3.பளக்கம்).

10) ஆலும் வேலும் ..... நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.

(1.பல்லுக்குருதி 2.பல்லுக்குறுதி 3.பள்ளுக்குறுதி)

03-சொற்றொடர்களுக்கான பிரதியீடு

(E) சொற்றொடர்கள் விளக்கும் பொருத்தமான தனிச் சொல்லைக் கீறிடுக.

1) எவருக்கும் இல்லை என்று கூறாது அள்ளி வழங்குபவன்.

1.உலோபி 2. அரசன் 3. வள்ளல்

2) அரண்மனையில் பெண்கள் வாழும் பகுதி.

1. ஆசிரமம் 2. விடுதி 3. அந்தப்புரம்

3) எதிர்கால நிகழ்வுகளை முன் கூட்டியே கூறுபவன்

1. தீர்க்கதரிசி 2. விஞ்ஞானி 3. அறிவாளி

4) தேர்தலில் போட்டியிடுபவர்.

1.மந்திரி 2. வேட்பாளர் 3. அமைச்சர்

www.lkedu.lk

5) எவருக்கும் எதையும் வழங்காதவன்.

1.கொடையாளி 2. ஏழை 3. உலோபி

6) தாய் தந்தையை இழந்தவர்கள்

1.அகதிகள் 2. அநாதைகள் 3. குழந்தைகள்.

7) எழுபத்தைந்து வருடங்களின் பின் கொண்டாடப்படும் விழா.

1.மணி விழா 2. பவள விழா 3. வெள்ளி விழா

8) நூறு வருடங்களின் பின் கொண்டாடப்படும் விழா.

1.நூற்றாண்டு விழா 2. பொன் விழா 3. மணி விழா

9) பொருட்களை சேமித்து வைக்கும் இடம்.

1.கடை 2. வீடு 3. களஞ்சியம்

10) தனது நோயிற்கு தானே சுயமாக செய்யும் வைத்தியம்.

1.கைம்மருந்து 2. ஒத்தடம் 3. ஆயுர்வேதம்

11) சொத்து சுகம் யாவற்றையும் இழந்தவர்கள்.

1.பாவிகள் 2. அகதிகள் 3. பிச்சைக்காரர்கள்

12) கடவுள் இல்லை என கூறுபவன்.

1.ஆத்திகன் 2. விஞ்ஞானி 3.நாத்திகள்

13) ஆறும் கடலும் ஒன்று சேருமிடம்.

1. பாலம் 2. கழிமுகம் 3. ஓடை

14) மாலையில் கூடும் சந்தை

1 பொது சந்தை 2. அல்லங்காடி 3. மீன் சந்தை

15) ஒரு நாட்டின் பிரதான நகரம்

1.தலைநகரம் 2. வியாபார நகரம் 3.நவீன நகரம்

16) நிலத்தின் கீழ் செல்லும் இரகசிய பாதை.

1.மேம்பாலம் 2. சுரங்கம் 3. ரயில் பாதை

17) விமானம் செலுத்துபவன்.

1.வலவன் 2. மாலுமி 3. பாதசாரி

18) அறுபது வருடங்களின் பின் கொண்டாடப்படும் விழா.

1.தசாப்த விழா 2. பொன் விழா 3. மணி விழா

19) எதிர்பாராமல் திடீரென ஏற்படும் மரணம்.

1.விபத்து மரணம் 2. அகால மரணம் 3. சிறந்த மரணம்

20) இறந்தவருக்காகச் செய்யப்படும் கடைசி சமயச் சடங்கு.

1.ஈமக்கிரியை 2. தர்ம உரை 3. நற்போதனை

www.lkedu.lk

04- பெறுமானப் பிரதியீடு

(F) கட்டங்களில் காணப்படும் பெறுமானத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிந்து கீறிடுக.

1)	**6x4** + 5 = 29	1). 2 x 4	2). 3x8	3). 15 - 3
2)	3 x 5 = **15**	1). 8 - 2	2). 8 + 2	3). 20 - 5
3)	28 + **6 + 8** = 42	1). 19 - 6	2). 7 x 7	3). 12 + 2
4)	28 + **15 - 5** = 38	1). 12 + 3	2).36 - 26	3). 36 - 3
5)	**20 ÷ 2** X 5 = 50	1). 12-3	2). 20-10	3). 6 X 4
6)	**9 X 5** + 8 - 10 = 43	1). 38 +7	2). 6 X 6	3). 26 ÷ 2
7)	6 x 5 = **15X 2**	1.) 12+4	2). 6 -2	3). 36 - 6
8)	**40 ÷ 2** X 5 = 100	1). 20X4	2). 20X5	3). 5 X 4
9)	**12 + 3** + 5 - 5 = 15	1). 5 X 4	2).7 + 8	3). 6 ÷ 3

05- எண்குறியீடுகளுக்கான பிரதியீடு

(G)கீழே தரப்பட்டுள்ள இந்து அராபிய எண்களின் பெறுமதியைக் காட்டும் சரியான உரோம எண்ணைத் தெரிந்து அதன் கீழ்க்கீறிடுக

1)	15 = ...	1) ix	2) xv	3) xix	6)	8 = ...	1)xv	2) x ii	3) viii
2)	9 = ...	1) iv	2) x	3) ix	7)	16 = ...	1) xvi	2) xiv	3) xv
3)	13 = ...	1) viii	2) xiii	3) iii	8)	12 = ...	1) xii	2) xiii	3) xvi
4)	6 = ...	1) iv	2) vi	3) ix	9)	17 = ...	1) xviii	2) xvii	3) xix
5)	19 = ...	1) vi	2) iv	3) xix	10)	14 = ...	1) ix	2) xx	3) xiv

06-எண் பிரதியீடு

(H) தரப்பட்டுள்ள குறியீடுகளையும் அதன் பெறுமானத்தையும் அவதானித்து சரியான விடையைக் கீறிடுக.



1)	 =	1) 14	2) 10	3) 15	4) 16
2)	 =	1) 13	2) 14	3) 17	4) 12
3)	 =	1) 8	2) 7	3) 9	4) 10
4)	 =	1) 11	2) 12	3) 13	4) 14
5)	 =	1) 5	2) 6	3) 7	4) 8

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

அன்பின் பெற்றோர்கள் அறிய,

உங்கள் சிறார்களுக்கு விடுமுறை காலத்தில் எவ்வாறான பயிற்சிகளை வழங்க வேண்டும் ,எப்போது வழங்க வேண்டும் போன்ற பிரச்சினைகளுக்கு ஒரு சிறிய தீர்வாக இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை பிரசுரித்துள்ளேன். இங்கு காணப்படும் பயிற்சிகளை ஒரு உதாரணமான பயிற்சியாகக்கருதி இதுபோன்ற பல வினாக்களை உருவாக்கி உங்கள் பிள்ளைகளுக்கு தினமும் ஒரு பயிற்சியாக குறிப்பிட்ட நேரத்தில் வழங்கி அவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக இந்த விடுமுறையை ஆக்கிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை யாரும் **வியாபார நோக்கத்திற்குப்** பயன்படுத்த வேண்டாம் என்றும் மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்-

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

❖தொலைபேசி இல

071-182-6-181 – 077-635-8-304 – 047-222-1-503

❖மின்னஞ்சல்

primaryisa@gmail.com

❖தொடர்புகளுக்கு

STUDY CENTRE

(The Centre for Primary Education)

48/1, BARRACK STREET,

HAMBANTOTA.

www.ikedu.lk